# மம்மர் அறுக்கும் மருந்து – கல்வி

**செ. சுனிதா**
தமிழ்த்துறை, திருச்சிலுவை கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012.
மின்னஞ்சல்: sunitha.s@holycrossngl.edu.in

**ஆய்வுச் சுருக்கம்**
*கல்வி என்பது அறிவுப் பெருக்கத்திற்கு உதவும் செயல்பாடாகும். கல்வியறிவுடையோர் சமூகத்தில் உயர்ந்தவராகப் போற்றப்பட்டனர். எந்நாட்டிலும் அவர்களுக்கு உயர்ந்த சிறப்பு அளிக்கப்பட்டது. கற்றவர்களின் சிறப்பு அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி தமிழ் இலக்கியங்களில் சான்றோர்கள் விதைத்துள்ளனர். அவ்விதையே இன்று விருட்சமாக வளர்ந்து கல்வி அறிவு விழுதுகளாகச் சமூகத்தில் நிலை கொண்டு உள்ளன என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.*

## முன்னுரை

கல்வி தனிமனிதனை மட்டுமல்ல சமூகத்தையே மேம்படுத்தும் ஒரு கருவி. கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த சான்றோர்கள் மக்களிடம் உள்ள அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவுச் சுடரை ஏற்றுவதற்கு கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். யாராலும் திருடிச் செல்ல முடியாத, கொடுக்க கொடுக்க வளரக்கூடிய ஒரேச் செல்வம் கல்விச் செல்வம் ஆகும். அறிவுடையார் எல்லாம் உடையவர். அறிவின் அடிப்படை கல்வியாகும். கல்வியும் அறிவும் பிரித்தல் இல்லாப் பண்புடையது. அதனாலே கல்வியறிவு என்று ஒன்றாகச் சேர்த்துச் சொல்லப்படுகிறது. கல்வியின் பயனாகத் தமிழர் கண்ட கலைகள் மற்றும் அவர்தம் வாழ்வும் அன்று உலகையே தன் பக்கம் சுழலச் செய்தன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏராளம் உள்ளன. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கல்விச் சிந்தனைகளை அடையாளம் காணும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

தமிழரின் முதல்நூல் எனும் பெருமையைப் பெற்றது தொல்காப்பியம் ஆகும். பொருளதிகார அகத்திணையியலில் பிரிவை விளக்கும் நோக்கில் முதலாவதாக கல்வியை முன்னிறுத்துகிறார் தொல்காப்பியர்.

**ஓதல் பகையே தூதிவை பிரிவே (தொல். அகம். 27)**

இதில் ஓதல் என்பது கல்வி கற்கும் பொருட்டுப் பிரிதல் ஆகும். இது தமிழரின் சமூக மரபு என்பது மேற்கண்ட நூற்பா வழி அறியலாம்.

சமூகப் பிராணியான மனிதனை விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு மாற்றுவது கல்வியாகும். சங்க இலக்கியங்களில் கல்வியின் உயர்வைப் பேசும் பாடல்கள் பல உள்ளன.

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே” (புறநானூறு 183)**

என புறநானூறு கூறுகிறது. ஆனால் சங்ககாலக் கல்விநிலையங்கள் அமைந்த இடம், அமைந்த முறை, அவை இயங்கிய தன்மை, பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை கல்வி கற்பிக்கப்பட்ட முறை ஆகியவை பற்றியக் குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படவில்லை.

**கல்வி கற்கும் காலம்**

“இளமையில் கல்” என்பதன் மூலம் இளமைக்காலத்தை கல்வி கற்கும் காலமாக வரையறுத்ததை அறிந்துகொள்ள முடிகிறது. இளமைக் காலம் மகிழ்ச்சி நிறைந்த காலம் எனவே

**சுரம் போக்கி உலகு கொண்டார் இல்லையே**
**மரம் போக்கிக் கூலி கொண்டார் இல்லை.**

**(பழமொழி நானூறு-கல்வி-1)**

என்ற பழமொழி பயணம் செய்வதற்குப் படகின் கூலியை முன்னதாகக் கொடுத்து ஆற்றைக் கடப்பதற்கு வழிவகை செய்து கொள்வதற்கொப்ப தன் எதிர்காலத்தைச் செம்மையாகக் கடப்பதற்கு இளம்வயதில்

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே (புறநானூறு 46)**

என்ற முதுமொழிக்கு ஏற்ப பிறரிடம் உதவி பெற்றாவது கல்வியைக் கற்றுத்தேர்வது வாழ்க்கைப் பயணத்தைக் கடக்க நலம் பயக்கும். எனவே கல்வி கற்பதற்குரிய காலம் இளமைக் காலம் என்பது தெளிவாகிறது.

**தமிழ் இலக்கியங்களில் கல்வி**

சமுதாயத்தில் ஒருவர் முழுமனிதனாக வாழ உலகில் எத்தனைச் செல்வங்கள் இருந்தாலும் கல்விச் செல்வமே இன்றியமையாதது என்பதைக் குமரகுருபரர்

**கல்வி யுடைமை பொருளுடமை யென்றிரண்டு**
**செல்வமும் செல்வம் எனப்படும் - இ்.லார்**
**குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்**
**தலை வணங்கித் தாழப் பெறின் (நீதிநெறி 15)**

என்ற நீதிநெறி விளக்கப்பாடல் மூலம் கூறுகின்றார்.

திருக்குறளில் திருவள்ளுவர் கல்வியின் சிறப்பையும் கற்றலின் உயர்வையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளளார். கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்களின் வாயிலாக கல்விப் பற்றிய கருத்துகளை விளக்கியுள்ளார்.

அடிப்படையில் கல்வியை ஒருவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை அறிவுறுத்திய வள்ளுவர்

**கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக (குறள் 391)**

என்று கூறுகின்றார். ஒருவர் ஐயமற கற்க வேண்டும், ஆழ்ந்து கற்க வேண்டும். அதன்படி வாழ்க்கையில் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை மிகத் துல்லியமாக இரண்டே வரிகளில் புலப்படுத்தியுள்ளார்.

காலச்சூழலுக்கேற்ப பலவகையான நூல்கள் தற்பொழுது வெளிவருகின்றன. மாணவர்கள் அத்தகைய நூல்களின் தகுதியறிந்து பயன்தரவல்ல நல்ல நூற்களை மட்டுமே படிக்க வேண்டும். அப்பொழுதுதான் கற்றலின் பயனை அடைய முடியும் என்பதை

**ஆற்றலின் அளவு அறிந்துகற்க அவைஅஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு (குறள் 725)**

என்ற குறள் வாயிலாக திருவள்ளுவர் விளக்குகின்றார். கல்வியானது இம்மை மறுமை பிறவிகளில் பயன் தரக் கூடியது என்பதை நாலடியார் பாடல் விளக்குகிறது.

**இம்மை பயக்குமால் ஈயக்குறை வின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணோம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து. (நாலடியார் 132)**

கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும். பிறருக்குத் தருவதால் குறையாது. கற்றவர் புகழை எங்கும் பரவச் செய்யும் தாம் உயிரோடு இருக்கும்வரை அழியாது. ஆதலால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை கண்டதில்லை. என்பதை மேற்கண்ட பாடல் விளக்குகிறது.

திருத்தக்கதேவர் தாமியற்றிய சீவகசிந்தாமணியில், சீவக மன்னன் வாயிலாகச் செப்பும் சீரிய உரைகளும் சிந்திக்கத் தக்கவை.

**கைப்பொருள் கொடுத்தும் கற்றல்**
**கற்றபின் கண்ணும் ஆகும்**
**மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின்**
**மெலிவிற்கோர் துணையும் ஆகும்**
**பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்**
**புகழுமாம் துணைவி ஆக்கும்**
**இப்பொருள் எய்தி நின்றீர்!**
**இரங்குவது என்னை? என்றான் (சீவகசிந்தாமணி 207 பாடல்)**

கல்வி, மெலியும் நெஞ்சிற்கு வலிவுள்ள துணையாகும் என்கிறான் சீவகமன்னன்.

அழியாச் செல்வம் கல்வியே என்பதைக் கல்வியிற் பெரியவர், கவிச்சக்கரவர்த்தி என்றெல்லாம் சிறப்பாக அழைக்கப்படும் கம்பர் தம் சரசுவதி அந்தாதியில் தெளிவாக விளக்கியுள்ளார்.

**வைக்கும் பொருளும் இல்வாழ்க்கைப்**
**பொருளும் மற்றெப்பொருளும்**
**பொய்க்கும் பொருள் அன்றி நீடும்**
**பொருள அல்ல பூதலத்தின்**
**மொய்க்கும் பொருளு மழியாப்**
**பொருளும் விழுப் பொருளும்**
**உய்க்கும் பொருளும் கலைமா**
**ணுணர்த்து முரைப் பொருளே! (சரசுவதி அந்தாதி 26)**

கல்வியின் அழியாமையையும், உலகத்து உள்ள பொருள்களிலே ஒப்புயர்வற்றது கல்வி ஒன்றே என்பதனையும் அது உள்ளத்துப் பொருள் என்பதனையும் விவேகசிந்தாமணி விளக்கமாக வெளியிடுகிறது.

**வெள்ளத்தால் அழியாது வெந்தழலால்**
**வேகாது வேந்த ராலும்**
**கொள்ளத்தான் இயலாது, கொடுத்தாலும்**
**நிறைவொழியக் குறைபடாது,**
**கள்ளத்தார் எவராலும் களவாட**
**முடியாது கல்வி என்னும்**
**உள்ளத்தே பொருளிருக்க உலகெங்கும்**
**பொருள்தேடி உழல்வ தென்னே (விவேக சிந்தாமணி)**

கற்றவர்க்கு அன்னமும், கல்லாதவர்க்குக் காகமும் உவமை. அன்னமானது பாலும் நீரும் கலந்திருந்தாலும், நீரையொதுக்கிப் பாலைப் பிரித்துப் பருகும் பண்புடையது. கற்றவரும் தம் பகுத்தறிவால் உண்மையல்லாத கருத்துகளை ஒதுக்கி, உண்மையுள்ள கருத்துகளையே ஏற்றுக்கொள்வர். இழிந்த காகமோ, சுடுகாட்டில் அழுகிக் கிடக்கும் பிணத்தையும் கொத்தித் தின்னும். கல்லாத மூடரின் பண்பும் அந்த அளவுக்கு இழிந்ததே. அவர்கள் பகுத்தறிவற்ற காரணத்தால் எந்த இழிச்செயலையும் செய்யத் துணிந்து விடுவர். என்பதை

**நற்றாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை யுகக்கும் பிணம் (மூதுரை 24)**

என்னும் பாடல் விளக்குகிறது.

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில்**
**மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**
**தன் தேயம் அல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு (மூதுரை 26)**

அரசனை விடக் கல்வியறிவுடையவன் சிறந்தவன் என்று விளக்குகிறது.

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து**
**நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு. (நாலடியார் 131 பாடல்)**

மயிர் முடியின் அழகும், ஆடையின் கரை அழகும், மஞ்சள் பூசும் அழகும் அழகுகள் தாம். எனினும் அவற்றைவிடச் சிறந்த அழகு கல்வியழகு என்று கூறும் நாலடியார் பாடலிலிருந்து கல்வியின் உயர்வு, கற்றவர் பெருமை, கல்லாதார் சிறுமை ஆகியவற்றை நாம் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

ஆசாரக்கோரவை என்ற நூல் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை தொகுத்துக்கூறும் நூலாகும். கல்வியே ஒழுக்கத்திற்குக் காரணமாகும் என்பதை வலியுறுத்துகிறது. கல்வி கற்பிக்கும் ஆசிரியனுக்கு (அந்தணனுக்கு) தட்சணை கொடுக்க வேண்டும் என்றும், வேள்வி செய்தல், தவம் செய்தல் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.

**தக்கணை வேள்வி தவங்கல்வி யிந்நான்கும்**

**முப்பா லொழுக்கினாற் காத்துய்க்க – உய்க்காக்கால்**

**எப்பாலு மாகாக் கெடும் (ஆசாரக்கோவை -3)**

கற்பிக்கும் ஆசிரியனுக்குக கூலி கொடுக்க வேண்டும். என்பதை வலியுறுத்தும் முதல்நூல் ஆசாரக்கோவை ஆகும். கல்வியறிவுடையோர் ''பலர் நடுவில் இருந்து பழிபேச மாட்டார்கள். எந்நேரமும் உறங்கமாட்டார்கள். ஒன்றைச் செய்வதாகக் கூறிவிட்டுச் செய்யாமல் போகமாட்டார்கள்'' என்கிறது ஆசாரக்கோவை.

(ஆசாரக் கோவை 48)

இத்தகைய இளைய சமுதாயம் பெறும் கல்வியினால் நம்நாடு பல்வேறு நிலைகளில் சிறப்படையும். சிறுகுழந்தைகளுக்கு அறிவுரை கூறுவதுபோல் “ஓடி விளையாடு பாப்பா” என்ற பாடலில் பாரதியார்

**காலையில் எழுந்தவுடன் படிப்பு – பின்பு**

**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**

**மாலை முழுவதும் விளையாட்டு – என்று**

**வழக்கப்படுத்தி கொள்ளு பாப்பா**

என்று குழந்தைக் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றார்.

கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்தவர்கள் இளமையில் கல்வி கற்க வாய்ப்பில்லாமல் போனாலும். அவர்கள் பின்னர் வருத்தம் அடைவர். இது உலக இயல்பு இதனை உணர்ந்த பாரதி முதுமையான வயதுடையவர்களுக்கும் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை

**ஓதியனின் நிழல் தன்னில்**

**ஒரு பள்ளிக் கூடம் கட்டி**

**முதியவர் கற்க வேண்டும்**

**முன்னவர் கலைகளெல்லாம்**

என்ற பாடல் வழி எடுத்துரைக்கின்றார்.

சமுதாயத்தில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் அதிக எண்ணிக்கையில் கல்வியறிவு பெற வேண்டும் என பாரதிதாசன் விரும்பினார். ஏனெனில் அக்காலத்தில் பெண்கள் கல்விகற்பது என்பதே அரிது. பெண்கள் உயர்நிலையை அடைய பெண்கல்வி இன்றியமையாதது என்றார்.

**கல்வி இல்லாத பெண்கள்**

**களர்நிலம் அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்**

**நல்ல புதல்வர்கள் விளைந்திடுவதில்லை**

**(குடும்ப விளக்கு ப. 48)**

இன்றைய நிலையில் கல்விமுறையில் காலத்திற்கேற்ப மாற்றம் செய்ய வேண்டி உள்ளது. இதனைப் புதுக்கவிதைக் கவிஞர்கள் பலர் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

**கல்வியைக்**
**கண் என்கிறார்கள்**
**உண்மைதான்**
**அதற்கிங்கே**
**அறுவை சிகிச்சை**
**அவசியமாய் உள்ளது**

என்ற மு. மேத்தாவின் கவிதை இன்றைய கல்விமுறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதைக் கூறுகின்றது.

**படை வீரர்களைப்**
**படைக்க வேண்டிய கல்வி**
**நடை நோயாளிகளைத் தயாரித்தது**

**வைரமுத்து கவிதைகள் ப. 266**

**மூளையில் முள்நடும்**
**நமது**
**கல்வித்திட்டம் மாறட்டும் (இன்னொரு தேசிய கீதம்)**

என்ற வைரமுத்துவின் கவிதைகள் பழமையை விடுத்துப் புதுமையைப் பின்பற்றி இக்காலத்திற்கேற்ப கல்வி நிலையங்கள் உருவாக்கிட வேண்டும். அப்பொழுதுதான் சிறந்த சமுதாயம் உருவாகி நாடு முன்னேற முடியும் என்பதை விளக்குகிறது.

**தொகுப்புரை**

- தொல்காப்பியர் காலத்தில் கல்வி கற்கும் பொருட்டு பிரிவு ஏற்பட்டுள்ளது.
- சங்ககால இலக்கியங்களில் கல்விநிலையங்கள் அமைந்த இடம், அமைந்த முறை, அவை இயங்கிய முறை, பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை, கல்வி கற்பிக்கப்பட்ட முறை ஆகியவைப் பற்றியக் குறிப்புகள் இல்லை.
- கல்வி கற்பதற்குரிய காலம் இளமைக் காலம் என்பது இலக்கியங்கள் வழி தெளிவாகிறது.
- கல்வி, கல்லாமை, அறிவுடைமை, கேள்வி போன்ற அதிகாரங்களின் வாயிலாக கல்விப் பற்றிய கருத்துகளை திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.
- கற்பிக்கும் ஆசிரியனுக்கு கூலி கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முதல் நூல் ஆசாரக் கோவை ஆகும்.
- பாரதியார் முதுமைக்கல்வி பற்றியும் தம் பாடலில் பாடியுள்ளார்.
- பெண்கல்வி இன்றியமையாதது.
- கல்விமுறையில் காலத்திற்கேற்ப மாற்றம் செய்ய வேண்டியுள்ளது.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்கள் இவ்வாறு கல்வியின் சிறப்பையும், அதனைக் கற்பதால் வரும் நன்மைகளையும், கற்றுணர்ந்த சான்றோரின் சிறப்புகளையும் எடுத்துரைக்கின்றன. கல்வி மனித சமுதாயத்திற்கு முதுகெலும்பாய்த் திகழ்கின்றது. ஒழுக்கம், பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கம், உலகத்தோடு ஒட்டவாழ்தல் போன்றவற்றிற்கும் அடிப்படையாகத் திகழ்கின்றது. கல்வியை அழியாச் செல்வமாய் அனைவரும் பெறும்போது நாடு எல்லா வளங்களும் பெற்றுத்திகழும் என்பதில் ஐயமில்லை.

**துணைநூற் பட்டியல்**


1. கு.வெ. பாலசுப்பிரமணியன். தொல்காப்பியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை; 2019.
2. பேராசிரியர் எஸ். வையாபுரிபிள்ளை. சங்க இலக்கியம், பாரிநிலையம் வெளியீடு, சென்னை; 2015.
3. இரா.நெடுஞ்செழியன். திருக்குறள்-தெளிவுரை, நன்செய் பதிப்பகம், சென்னை; 2024.
4. பாரதியார் கவிதைகள்,ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன்ஸ், சென்னை; 2023.
5. பாரதிதாசன் கவிதைகள், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை; 2014
6. வைரமுத்து. வைரமுத்து கவிதைகள், சூர்யா லிட்ரேச்சர் வெளியீடு, சென்னை; 2009